**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6**

**செப்டம்பர்/அக்டோபர் 2018 பத்தாம் வகுப்பு துணைத் தேர்வு**

**அறிவியல் பாட செய்முறைத் தேர்வில் தனித்தேர்வர்கள் கலந்து கொள்ளுதல் குறித்த**

## செய்திக் குறிப்பு

நடைபெறவுள்ள செப்டம்பர்/அக்டோபர் 2018 பத்தாம் வகுப்பு துணைத் தேர்விற்கு அறிவியல் பாடத்திற்கு விண்ணப்பித்துள்ள தனித்தேர்வர்கள் அந்தந்த மாவட்டக் கல்வி அலுவலர்களால் **18.09.2018 (செவ்வாய்க் கிழமை) முதல் 20.09.2018 (வியாழக் கிழமை)** வரையிலான தேதிகளில் நடத்தப்படும் பத்தாம் வகுப்பு அறிவியல் பாட செய்முறைத் தேர்வில் கலந்து கொண்டு செய்முறைத் தேர்வெழுத அறிவிக்கப்படுகிறார்கள்.

- ஏற்கனவே அறிவியல் பாட செய்முறைத் தேர்வெழுதி தோல்வியுற்ற தேர்வர்கள் தற்போது அறிவியல் பாட செய்முறைத் தேர்வை மீள எழுத வேண்டும்.
- அறிவியல் பாட செய்முறைப் பயிற்சி பெற்று ஆனால் செய்முறைத்தேர்வெழுதாமல் விடுபட்ட தனித்தேர்வர்கள் மேற்குறிப்பிட்ட நாட்களில் செய்முறைத் தேர்வில் கலந்துகொள்ளலாம்.
- நேரடித் தனித்தேர்வர்களை பொறுத்தவரை (Fresh Candidate - first time applied for all subjects) அறிவியல் பாட செய்முறைத் தேர்வெழுதிய பின்னரே, அறிவியல் பாட கருத்தியல் தேர்வு உட்பட ஏனைய பாடங்களில் தேர்வெழுத இயலும் என்பதால், இத்தேர்வர்கள் ஏற்கனவே அறிவியல் பாட செய்முறைத் பயிற்சி வகுப்பில் பயிற்சி பெற்றிருப்பின், அவர்களும் மேற்குறிப்பிட்டுள்ள தேதிகளில் செய்முறைத் தேர்வில் கலந்து கொண்டு தேர்வெழுதிய பின்னர் செப்டம்பர்/அக்டோபர் 2018 தேர்வெழுதலாம்.
- **எஸ்.எஸ்.எல்.சி மார்ச் 2019 தேர்விற்கு அறிவியல் பாட கருத்தியல் தேர்வுக்கு விண்ணப்பிக்க உள்ள தனித்தேர்வர்கள் ஜூன் 2018–ல் அறிவியல் செய்முறை பயிற்சி வகுப்பிற்கு பெயர்களை பதிவு செய்திருப்பர். அத்தகைய தேர்வர்கள் செப்டம்பர்/அக்டோபர் 2018 செய்முறை தேர்வெழுத அனுமதிக்கப்படமாட்டார்கள்.**

மேலும் செய்முறைத் தேர்வு நடத்தப்படவுள்ள பள்ளிகளின் விவரங்களை சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர்களை நேரில் அணுகி பெற்றுக் கொள்ள அறிவிக்கப்படுகிறார்கள்.

**இடம்:** சென்னை – 600 006
**நாள்:** 31.08.2018

**ஒம்/–**
**இயக்குநர்**